## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – மாற்றுத் திறனாளிகளுக்கும் அவர்களுடன் செல்லும் ஒரு உதவியாளருக்கும் தமிழக அரசின் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (White Board) கட்டணமில்லா பயண வசதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.01

நாள் :03.06.2021
பிலவ, வைகாசி –20 ,
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்க:

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கடித ந.க.எண். 5176/மா.தி.ந.–2.3/2021, நாள்.17.05.2021.

-----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடிதத்தில், தற்போது 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேற்பட்ட ஊனமுற்ற மாற்றுத் திறனாளிகள் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய பல்வேறு சலுகைகள் உள்ளன என்றும் இருப்பினும் தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் நகரப் பேருந்துகளில் இலவச பயணச் சலுகை ஏதும் இதுகாறும் இவர்களுக்கு வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளார். மேலும் தற்போது நடைமுறையிலுள்ள கட்டண சலுகைகள் 1995ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலச் சட்டம் நடைமுறையிலிருந்த போது அதில் தெரிவிக்கப்பட்டிருந்த 9 வகையான மாற்றுத் திறனாளிகளுக்கு மட்டுமே பொருந்தும் வகையில் உள்ளது என்றும் தற்போது மேற்படி சட்டம் திரும்பப் பெறப்பட்டு 2016ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலச் சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள 21 வகையான மாற்றுத் திறனாளிகளுக்கும் இலவச பயணச் சலுகை வழங்குவது அவசியமாகும் என்றும் பின்வரும் கருத்துருக்களின் மீது அரசின் ஆணையினைக் கோரியுள்ளார்:-

(அ) தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் சாதாரண நகரப் பேருந்துகளில், 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலும் மாற்றுத் திறனுடையவர்களுக்கு அவர்களது துணையாளர்களுடன் (escort) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையை பேருந்து நடத்துநரிடம் காண்பித்து இலவசமாகப் பயணம் செய்யலாம்.

(ஆ) மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர்களுக்கு நகரப் பேருந்துகளில் இலவச பயணச் சலுகை அளிப்பதற்காக தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆண்டுதோறும் ஒட்டு மொத்தமாக மாற்றுத்

திறனாளிகள் நலத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நிதித் துறை ஆகியவற்றால் கூட்டாக நிர்ணயம் செய்யப்படும் தொகையினை வழங்கலாம்.

2. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

(அ) 2016ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலச் சட்டம் நடைமுறையில் உள்ள நிலையில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள 21 வகையான மாற்றுத் திறனாளிகளில், 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர்(escort) ஒருவருடன் தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் (White Board) கட்டணமில்லா பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

(ஆ) இச்சலுகையைப் பெற மாற்றுத் திறனாளிகள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையைப் பேருந்தின் நடத்துநரிடம் காண்பிக்க வேண்டும்.

(இ) மகளிருக்கு ஏற்கனவே இலவச பயணச் சலுகை உள்ளதால் மாற்றுத் திறனாளிகளுடன் துணையாளராக வரும் மகளிருக்கு இக்கட்டணச் சலுகை பொருந்தாது.

3. மாற்றுத் திறனாளிகளால் நகரப் பேருந்துகளில் மேற்கொள்ளப்படும் பயணங்களைக் கணக்கீடு செய்யும் பொருட்டு, அவர்கள் பயணம் மேற்கொள்ளும் போது அதற்கான இலவச கட்டண சீட்டினை பேருந்தின் நடத்துநர் வழங்க வேண்டும். இலவச கட்டண சீட்டு வழங்குவது, மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பயணங்கள் குறித்த உரிய கணக்கீடுகளை மேற்கொள்ள தகுந்த வழிமுறைகளை உருவாக்க போக்குவரத்துத் துறையைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர்களுக்கு நகரப் பேருந்துகளில் இலவச பயணச் சலுகையால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களுக்கு ஏற்படும் இழப்பீட்டினை ஈடுசெய்யும் வகையில், ஆண்டுதோறும் ஒட்டு மொத்தமாக மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நிதித் துறை ஆகியவற்றால் கூட்டாக நிர்ணயம் செய்து, அத்தொகையினை மானியமாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழங்கங்களுக்கு வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. இவ்வாணை நிதி மற்றும் போக்குவரத்துத் துறைகளின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர்.லால்வேனா,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை– 5.
அனைத்து போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர்கள்.
(மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

கருவூல கணக்கு இயக்குநர், சென்னை–15.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:-**
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதி அமைச்சர் அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை–9.
நிதி(சந/சம்பளங்கள்)த் துறை, சென்னை–9.
போக்குவரத்துத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்